**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**OS.NO.109/2022**

**Name** : Anbu
**Father/Husband Name** : Krishnan

**Age** : 64

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 12.50 p.m**

**3 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் 3 வது பிரதிவாதி பார்த்தசாரதி என் மூத்த சகோதரர். நான் வழக்கில் 3 வது பிரதிவாதி என் உடன் பிறந்தவர் என்று எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். சுமார் 22 வருடங்களாக பொது வாழ்க்கையில் ஈடுப்பட்டவர் என்று காட்டுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் நான் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். நான் municipal counsellor ஆக 2001, 2006, 2011 ஆகிய வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவை என்றால் தாக்கல் செய்கிறேன் என்று சாட்சி சொல்கிறார்.

1 வது பிரதிவாதி அமர்நாத் என்பவர் Amma Assembly Deputy Secretary ஆக இருந்ததாக தெரிவித்துள்ள நிலையில் அதற்கான ஆதாரம் வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி ஜனார்த்தனன் எதிர் கட்சியில் பகுதி செயலாளராக இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில் அதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

அதேபோல் 3 மற்றும் 4வது பிரதிவாதிள் எதிர் கட்சியில் உறுப்பினராக இருப்பதாக சொல்லியதற்கும் நான் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5வது பிரதிவாதி Ex counsellor of Vellore Ward No.1 ஆக இருந்தார் என்று சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ 13–ஒரு போஸ்டர் இவ்வாறு ஒட்டியுள்ளார்கள் என்பதால் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் மீது மான நஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த போஸ்டரில் எங்காவது 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயர்கள் உள்ளதா என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் இல்லை. அதேபோல் என்னுடைய மூத்த சகோதரர் 3வது பிரதிவாதி பார்த்தசாரதி என்பவரின் பெயரும் அதில் இல்லை என்றால் சரிதான்.

வார்டு 1 ல் 1800 குடும்பங்கள் உள்ளது. 6900 நபர்கள் அந்த 1வது வார்டில் உள்ளனர். இந்த போஸ்டரில் இவன் 1வது வார்டு ஊர் பொது மக்கள் என்று பொதுவாக உள்ளது என்றால் சரிதான். நான் 1வது வார்டு உறுப்பினர்களின் பெயரில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் 2 நபர்கள் பார்த்தவர்களை சாட்சியாக போட்டுள்ளேன்.

1வது வார்டு ஊர் பொது மக்கள் என்பவர்களில் யாரையாவது நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த போஸ்டரின் அசல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ. 12– குமுதம் புத்தகத்தில் வந்துள்ளதாக தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டு 3வது பிரதிவாதி பெயர் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ. 12 மற்றும் 13 ஆகியவற்றை

வைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

போஸ்டர் யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு தெரியாது என்றாலும் வேண்டுமென்றே 3 வது பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் சகோதரருக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான்.

எனக்கும் என் சகோதருக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு இன்னும் வழக்கு நடந்து கொண்டுள்ளது. அந்த வழக்கு தற்போது நிலுவையில் இல்லை என்றாலும் அது சம்மந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதற்கும் இதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சாட்சி சொல்கிறார். எனக்கும் 3 வது பிரதிவாதிக்கும் முன் விரோதம் இருப்பதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

அந்த வழக்கில் 3 வது பிரதிவாதி கையெழுத்தை நான் போர்ஜரி செய்தததாக தான் அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. இதுபோன்ற தவறுகளை நான் செய்ததை அவர் சுட்டி காட்டியதால் தான் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், ஆனால் வாங்க மறுத்துவிட்டார்கள். அவ்வாறு வாங்க மறுத்துவிட்டார்கள் என்று தனி பிராது எதாவது தாக்கல் செய்தேனா என்றால் அதன் பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

நான் கொடுத்த புகாரில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை

என்பதால் அதை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வார்டு 1 ல் உள்ள பொரம்போக்கு நிலங்களை நான் ஆக்கிரமிப்பு செய்தேன் என்பதற்காக தான் பொது மக்கள் என் மீது அதுபோல் வாள் போஸ்டர் ஒட்டியுருக்கிறார்கள் என்றால் நான் அவ்வாறு என் பெயரில் எந்த சொத்தும் இல்லை, நான் ஆக்கிரமிப்பு பண்ணவில்லை. அதனால் எனக்கு அவப்பெயர் வந்ததால் பிரதிவாதிகள் மீது இவ்வாறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் உண்மையாக யார் செய்தது என்று தெரியாமல் பிரதிவாதிகளை இந்த வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, தெரிந்து தான் சேர்த்தேன்.

நான் கேட்டுள்ள மான நஷ்டஈடு வழக்கு எந்த விதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இந்த விசாரணையின் கூடுதலாக 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 3வது பிரதிவாதி தரப்பில் ஏற்றுகொள்வதாக தெரிவிக்கப்பட்டது. (அதற்கு வாதி தரப்பில் அன்றைய தேதியிலேயே முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிந்தபிறகு அன்றே அதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்றும் தற்போது விரிவான குறுக்கு விசாரணையை 3வது பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்டு 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்வது ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. இது சம்மந்தாக 3வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையை செய்ததாகவும் ஏதாவது விடுபட்டுவிட கூடாது என்பதற்காக 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக விளக்கம் அளிக்கப்பட்டது.)

இது குறித்து வாதத்தின் பிறகு முடிவு செய்யப்படும் என்று

தெரிவித்து தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கூறியது பதிவு செய்யப்படுகிறது.

**6, 7 மற்றும் 8 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போஸ்டரில் கீழ் பகுதியில் எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அச்சகத்தின் ஓனருக்கு மட்டுமே யார் இந்த தகவலை அவருக்கு அச்சிட கொடுத்தார்கள் என்று அவருக்கு மட்டுமே தெரியும் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை அந்த தகவலை அச்சகத்திற்கு யார் கொடுத்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். அவர்களை தெரிந்து கொண்டு அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அதற்கான முயற்சியும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

குமுதம் பத்திரிக்கையில் 19.04.2022 அன்று ரிப்போர்ட் வந்துள்ளது என்றால் சரிதான். அந்த ரிப்போர்ட்டில் என்ன பிரசுரம் ஆனது என்று எனக்கு நினைவுள்ளது தெரியும். அதில் முதல் பத்தியில் அந்த போஸ்டரில் என்ன தகவல் இருந்ததோ அதை தான் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2 வது பத்தியில் P.S. பழனி என்று உள்ளது என்றாலும் அது ஒரு கட்சியை சேர்ந்தவராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது பத்தியில் ரிப்போர்டர் P.S. பழனியை இது குறித்து தகவல் கேட்ட போது அவர் கூறியது பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு உள்ளது ஆனால், அது தவறான தகவல். நான் புத்தகத்தை படித்து பார்த்து தான் தெரிந்து கொண்டேன்.

அதேபோல் எதிர்கட்சி மாநகர மாவட்ட செயலாளர் S.R.K. அப்புவிடம் இது சம்மந்தமாக விசாரணை செய்து அவர் கூறியது பிரசுரிக்கப்பட்டுள்ளது

என்றால் அவ்வாறு உள்ளது ஆனால், அது தவறான தகவல். நான் புத்தகத்தை படித்து பார்த்து தான் தெரிந்து கொண்டேன்.

அமைச்சர் துரைமுருகன் என்பவர் ஒரு மீட்டிங்கில் இடம் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக பொதுவாக பேசியுள்ளார் என்றாலும் அதுவும் அதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றாலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது , ஆனால் அது தவறானது.

அதேபோல் வேலூர் மேயர் சுஜாதா என்பவரையும் இந்த போஸ்டர் பற்றி கேட்டபோது அவரும் ஒரு தகவல் சொல்லியுள்ளார் என்றாலும் அதுவும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த தகவலும் தவறானதுதான்.

அந்த ரிப்போர்டர் என்னை போன் மூலம் விசாரித்தார் என்றால் போன் மூலம் விசாரிக்கவில்லை நேரடியாக விசாரித்தார். நேரடியாக விசாரித்தபோது நான் கொடுத்த தகவலும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் நான் உண்மையை கூறினேன், ஆனால் அதற்கு மாறாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நான் 4வது முறையாக இந்த வார்டில் counsellor ஆக வென்று வருகிறேன், தொடர் வெற்றியை தாங்கி கொள்ள முடியாதவர்கள் செய்யும் வீண் பிரச்சாரம் இது என்று நான் சொன்ன தகவலும் அதில் பிரசுரமாகியுள்ளது என்றால் சரிதான்.

இந்த ரிப்போர்டில் நாங்கள் 4 பேர் கொடுத்த தகவலை தான் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 12–குமுதம் ரிப்போர்டிரின் தனிப்பட்ட கருத்து இதில் இல்லை என்றால் சரிதான், அவருக்கு எனக்கு தனிப்பட்ட தொடர்பு இல்லை.

7 மற்றும் 8 பிரதிவாதிகளுக்கும் இந்த ரிப்போர்ட் பப்ளிஷ்

செய்தவர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அவர்களை தேவையில்லாத தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தொழில் தர்மம், பத்திரிக்கை சுதந்திரம் பத்தரிக்கையின் தர்மத்தின் அடிப்படையில் தான் இந்த தகவலை பிரசுரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

அவர்கள் ரிப்போர்ட் பப்ளிஷ் செய்தது நல்ல எண்ணத்தில் தான் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அவதூறு வர வேண்டும் என்பதற்காக பிரசுரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. ரிப்போர்ட் போஸ்டர் சம்மந்தாக மட்டும் தான் உள்ளது என்றாலும் மற்றது எதுவும் இல்லை என்றாலும் சரிதான்.

நான் கேட்டுள்ள மான நஷ்ட இழப்பீடு கொடுக்க 6, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. அவர்களை தேவையில்லாமல் நான் தரப்பினர்களாக சேர்த்துள்ளதால் நான் தான் அவர்களுக்கு இழப்பீடு தர வேண்டும் என்றால் சரியல்ல.

அதேபோல் ஒரு பத்திரிக்கை சுதந்திரம் படி ஒரு விவரத்தை பிரசுரம் செய்தால் அது தவறாகாது என்றாலும் அவதூறாகாது என்றாலும் சரியல்ல.

இந்த தாவாவில் யார் இந்த போஸ்டரை அடித்தார்களோ அவர்களை குறிப்பிட்டு கண்டுபிடித்து சேர்க்கவிலலை என்றாலும் எனவே இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 01.35 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.11.19 15:12:54 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.